திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, இந்த டெக்ஸ்டைல் கம்பெனியை எவ்வளவு ஆண்டுக்காலமாக மூடிவிட்டார்கள்? இந்த அரசாங்கம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் அதை ஏற்று நடத்துகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நீண்ட நாட்களாக அந்த நிறுவனம் சரியாக நடைபெறாமல் கொஞ்சங்கொஞ்சமாக வேலையிலிருந்து தொழிலாளர்களை அனுப்பிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று நல்லெண்ணத்தின் அடிப்படையில் இது திறக்கப்பட்டது.

தஞ்சாவூரிலுள்ள சைக்கிள் தொழிற்சாலை

*519 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூரில் ஏற்படுத்தப்பட்ட சைக்கிள் தொழிற்சாலை இப்போது இயங்கிக் கொண்டிருக்கின்றதா?

(இ) ஆம் எனில், அதன் உற்பத்தியளவென்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) கடந்த மூன்று ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட சைக்கிள்களின் எண்ணிக்கை பின்வருமாறு—

1968-69	650.
1969-70 . . .	இல்லை.
1970-71	78.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவரவர்களே, தஞ்சையிலுள்ள சைக்கிள் தொழிற்சாலை லாபத்தில் இயங்குகிறதா அல்லது நஷ்டத்தில் இயங்குகிறதா? அதனுடைய விவரத்தை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சைக்கிள் உற்பத்தி அங்கே செய்யப்படவில்லை. சைக்கிள் ஸ்பேர் பார்ட்ஸ்களை வாங்கி அதை அசெம்பிள் செய்ய பயன்படுத்தினார்கள். இப்போதைக்கு ஏராளமாக தேக்கமிருப்பதால் சைக்கிள் அசெம்பிளிங் தொழிற்சாலைகளையெல்லாம் 'டைவர்சிஃபிகேஷன்' வேறுமுறை உற்பத்தியில் செல்லும்படி நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம். இந்த தஞ்சாவூர் நிறுவனத்தைப் பொறுத்தவரையில் பெரும்பாலும் லாபத்திலே ஓடி வருகிறது.

திரு. அ. தேவந்திரன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இதைப் போன்ற தொழிற்சாலைகளை தஞ்சை மாவட்டத்தில் மிகவும் பின் தங்கிய பகுதிகளில் ஆரம்பிக்கின்ற எண்ணம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கனம் அங்கத்தினர் அவர்களுடைய தொகுதியில் அவர்கள் முயற்சியெடுத்துக்கொண்டால் உதவி செய்யப்படும்.

கரப்பூண்டி அருகில் சர்க்கரை ஆலை

*520 வினா—**திரு. தொ. ப. சீனிவாசன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, கரப்பூண்டி கிராமம் அருகில் தனியார் துறையில் சர்க்கரை ஆலை ஒன்று துவங்க அனுமதி கேட்டு யாரேனும் மனுச் செய்தார்களா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) மத்திய அரசின் அனுமதி மறுக்கப்பட்டு விட்டது.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவரவர்களே, மத்திய அரசின் அனுமதி மறுக்கப்பட்டது என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். அந்தப் பகுதியிலே வாழ்பவர்களில் ஏறத்தாழ 80 சதவீதம், 85 சதவீதம் விவசாயிகள் வாழ்கிறார்கள். அங்கே பயிரிடப்படும் கரும்புகளை வெல்லமாகச் செய்ய அங்கேயே எந்த ஆலைக்கும் போக முடியவில்லை. பக்கத்திலுள்ள கள்ளக்குறிச்சி, ஆம்பூர் ஆலைகளுக்கோ அல்லது வேலூர் ஆலைக்கோ செல்ல வேண்டியிருக்கிறது. எங்கள் தொகுதியிலே உற்பத்தி செய்ய முடியாமலிருக்கிறது. எனவே எங்கள் தொகுதியிலுள்ள விவசாயிகளை உற்பத்தியாக்க அனுமதிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நிலங்களை இதுபோன்ற சர்க்கரை ஆலைக்கு ஒதுக்க வேளாண்மைத்துறை அமைச்சரிடத்தில் கேட்க வேண்டும்.

தோல், கொம்புகளை பயன்படுத்தும் தொழிற்சாலை

* 521வினா—திரு. பெ. சென்திரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

தமிழ்நாட்டில் தோல், கொம்பு முதலிய கச்சாப் பொருட்களைப் பயன் படுத்தி ஓர் தொழிற்சாலை அமைக்க திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையி லுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, நம்முடைய தமிழ்நாட்டிலே தோல் மற்றும் கச்சாப்பொருட்கள் அதிகமாக ராணிப்பேட்டை போன்ற இடங்களில் இருப்பதாலும், தொழில்பேட்டை அமைக்க இடம் இருப்பதாலும் இங்கேயாவது அந்தத் தொழிற்சாலையை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுதே நம்முடைய அரசாங்கத்தின் சார்பில் வடார்க்காடு மாவட்டத்தில் ஒரு தொழிற்சாலை இயங்கிக்கொண்டிருக்கிறது. கூட்டுறவு சங்கங்களின் அடிப்படையில் சென்னையிலே இரண்டு தொழிற்சாலைகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இதுபோன்ற பெரிய தொழிற்சாலையை அமைக்க வேண்டுமென்ற ஒரு முயற்சியை தனியார் துறையைச் சேர்ந்தவர்கள் வெளிநாடுகளின் உதவியோடு முயற்சியெடுக்க வேண்டிய ஒரு திட்டமாகும்.

THIRU M A. LATHEEF : The largest number of tanneries are found at Vaniambadi. In view of the Minister's reply, may I know at least the possibility and feasibility of expansion of Governmently-run tanneries at Vinnamangalam? Will the Hon. Minister be pleased to state whether it can be expanded, so that it may be useful for the tanners in and around Vinnamangalam, Vaniambadi and Ambur?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, தோல்பதனிடும் தொழிற்சாலையை மீண்டும் அரசாங்கத் தரப்பிலே தொடக்க இடம் இல்லை. நாம் தோலைப்பதனிட்டு பெரும்பாலும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறோம்.